உ
ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"
அபிராமி பட்டர்

விஷூ வருடம் சித்திரை 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2032 (13-04-2001)

வெளியீட்டாளர்

அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்



மலர்: 2

இதழ்: 1

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472

துர்க்கா என்பவள் தூயவளே
தூய்மை வாழ்வின் தாயவளே
ஏழ்மைபோக்கும் இனியவளே
எதிலும் அவளாய் இருப்பவளே

கனடா நாட்டில் உதித்தவளாம்
கண்ணால்காண வந்தவளாம்
பேணபி மண்ணில் எழுந்தவளாம்
பேரினில் துர்க்கா என்பவளாம்

போரினில் வீரம் தந்தவளாம்
பொழுதினில் பாவம் தீர்ப்பவளாம்
கருவினில் காவல் காப்பவளாம்
கருத்திலும் நேர்மை சேர்ப்பவளாம்

வருவதில் அவளும் வான்மதியாம்
வந்ததும் இருளை வதைப்பவளாம்
தந்ததும் வாழ்கைச் சுகமவளாம்
தரணியில் அவளே தாயவளாம்

துர்க்கா என்பவள் தூயவளாம்
துன்பங்கள் அவளது தொலைவளமாம்
தந்திடுவோம் எங்கள் இதயங்களை
தந்திடுவாள் அவள் தனங்களை

போற்றிடுவோம் அவள் பாதங்களை
புன்சிரிப்பாலே சோந்திடுவாள்
ஏற்றிடுவோம் ஒளித்தீபங்களை
இல்லங்கள் எல்லாம் விடிந்திடுமே

துர்க்கா என்பவள் தூயவளாம்
தூய்மைவாழ்வின் தாயவளாம்

கவிஞர் க. கருணாகரன் ( யாழ் இரவி)
(ரொறன்ரோ)



# ஆலயமும் நாமும்

பிறக்கும் இந்த தமிழ்ப் புத்தாண்டில் இன்னுமொரு துர்க்காமஞ்சரி இதழ் மூலம் எமது ஆலய செயற்பாடுகளை அடியார்களாகிய தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். எமது ஆலயத்திற்கென்று யாப்பொன்று உருவாக்கப்பட்டு அந்தயாப்பின் பிரகாரம் வருடாவருடம் பொதுக்கூட்டம் கூடி புதிய நிர்வாகசபையை அமைத்து வருகிறோம். அதற்கேற்ப இந்த வருடம் தை மாதம் 21ம் திகதி அன்று புதிய நிர்வாகசபை பொறுப்பெடுத்துள்ளது. இந்த புதிய நிர்வாகம் ஒவ்வொரு வேலைத் திட்டத்திற்கும் ஒவ்வொரு செயற்குழுவை அமைத்துள்ளது. அச்செயற்குழுவில் இடம்பெறுவோரின் பெயர் விபரங்களை நாம் ஆலய விளம்பரப்பலகையில் அறியத்தருவோம். இவர்களுக்கு உதவிபுரிய விரும்பும் அடியார்கள் தாங்களாகவே முன்வந்து உதவி செய்யலாம்.

அந்நிய மண்ணில் எமது இந்து சமயமும், தமிழும் நிலைத்து நிற்குமா? எமது வழி வழி வந்த இந்த பாரம்பரியம் அந்நிய கலாச்சாரத்தில் புதையுண்டு போய்விடுமோ? என்ற பலகேள்விகள் எம்மனத்தில் இளையோடத்தான் செய்கிறது. எமது குழந்தைகள் எமது கலாச்சாரத்துக்கும் அன்னிய கலாச்சாரத்துக்கும் இடையில் இருந்து தடுமாறுகிறார்கள் எதை அவர்கள் பின்பற்றினால் அவர்களுக்கு நல்லது என்பதை நாம்தான் எடுத்துக் கூற வேண்டும் தமிழும் சைவமும் தழைத்தோங்க வேண்டுமெனில் நாம் ஆலயங்கள் அமைத்து எமது பாரம்பரியங்களை நாம் காப்பற்ற வேண்டும், அதற்கேற்பவே பிரிடிஸ் கொலம்பியாவில் எமக்கென்று ஆலயம் அமைத்து எமது பாரம்பரியங்களை காப்பாற்றிவருகிறோம்.

எமது துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒழுங்கு முறை தவறாத பூசைமுறைகளும், விழாக்களும் மாத்திரமின்றி சிறுவர்களுக்கு தமிழ், சைவம் இரண்டையும் மட்டுமல்ல யோக வகுப்புக்களையும் ஒவ்வொறு ஞாயிறு தோறும் நடாத்தி வருகிறோம். இந்த வகுப்புக்களுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புவதன் மூலம் பிள்ளைகளுக்கு நல்ல சமய அறிவை மட்டுமல்ல ஒழுக்க சீலர்களாகவும் வளர வழிவகுக்கும். பிரதி செவ்வாய், வெள்ளி தோறும் இரவு பூசைக்கு முன்பதாக பஜனை வகுப்புக்கள் நடைபெறுகின்றது. நல்ல பண்ணோடு பஜனை செய்யும் அடியார்கள் இதில் கலந்து கொள்ளும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது செயற்குழுவில் முக்கியமானது நிதி சேகரிப்புக்குழு, இந்தக் குழு ஆலத்திற்கு தேவைப்படும் நிதியை நிர்வாகத்தின் அனுமதியுடன் நிதி சேகரிப்பில் ஈடுபடும் போது தங்களால் இயன்ற நிதியுதவியை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். ஆலயத்திற்கு நன்கொடை செய்வதன் மூலமோ அல்லது ஆலயத்தின் காணிப்பங்குகளை தாங்கள் வாங்குவதன் மூலமோ ஆலய கடனை அடைப்பதற்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். ஆலயப் பராமரிப்புக்கு பூசை, அபிஷேகங்களில் வரும் பணம் மட்டும் போதாது என்பது அடியார்களாகிய உங்களுக்கு தெரியும். நாம் ஆலயக்கட்டிடத்தை கடன் எடுத்துதான் வாங்கினோம் அந்த கடனை திருப்பி செலுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

எமது ஆலயம் இன்று கடல் கடந்து பேசப்படுகிறதென்றால் அதற்கு எல்லாம் வல்ல அம்பிகையின் அருளே காரணம். எமது ஆலயத்தைப்பற்றி தமிழ் நாட்டில் வெளியாகும் குமுதத்தின் விசேட இதழான " பக்தி ஸ்பெசல் " என்ற இதழில் வெளியாகியிருப்பதை அப்படியே எமது துர்க்கா மஞசரியில் தருகிறோம். நமது ஆலய வளர்ச்சி பற்றி நாம் சொல்லுவதை விட வெளியார் சொல்லி கேட்க்கும் போது எமக்கு பெருமையாக இருக்கும். அன்பர்களே இதற்கு காரணம் எம்மிடம் உள்ள ஒற்றுமைதான் என்பதை நாம் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம். பிறக்கும் விசு வருடப் புத்தாண்டில் எமது மக்கள் அமைதியுடனும் சுபீட்சத்துடனும் வாழ எல்லாம் வல்ல அம்பிகையை பிரார்த்திப்போம்.

நிர்வாக சபையினர்

ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்

இராகு காலப்பூசை பிரதி செவ்வாய்தோறும் பகல் 2.00 மணிக்கு நடைபெறும்

## ஆலயத்தில் அடுத்த முதல் மூன்று மாத்திற்கு நடைபெற இருக்கும் விசேட விரதங்கள்.

| | | |
|---|---|---|
| 13-04-2001 - | வெள்ளிக்கிழமை | சித்திரை 1ம் திகதி தமிழ் புத்தாண்டு ( விசு வருடம்) |
| 16-04-2001 - | திங்கட்கிழமை | நடேசரபிசேகம் |
| 18-04-2001 - | புதன்கிழமை | ஸ்மார்த்த ஏகாதசி விரதம் |
| 19-04-2001 - | வியாழக்கிழமை | வைணவ ஏகாதசி விரதம் |
| 20-04-2001 - | வெள்ளிக்கிழமை | பிரதோச ஏகாதசி விரதம் |
| 22-04-2001 - | ஞாயிற்றுக்கிழமை | அமாவாசை விரதம் |
| 24-04-2001 - | செவ்வாய்க்கிழமை | கார்த்திகை விரதம் |
| 26-04-2001 - | வியாழக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 28-04-2001 - | சனிக்கிழமை | சஷ்டி விரதம் |
| 03-05-2001 - | புதன்கிழமை | ஏகாதசி விரதம் |
| 04-05-2001 - | வெள்ளிக்கிழமை | பிரதோச விரதம் |
| 05-05-2001 - | சனிக்கிழமை | சித்திரைச் சித்திரை |
| 06-05-2001 - | ஞாற்றுக்கிழமை | சித்திரா குப்த விரதம் |
| 10-05-2001 - | வியாழக்கிழமை | சங்கடகர சதுர்த்தி |
| 13-05-2001 - | ஞாற்றுக்கிழமை | சிரவண விரதம் |
| 18-05-2001 - | வெள்ளிக்கிழமை | ஏகாதசி விரதம் |
| 20-05-2001 - | ஞாற்றுக்கிழமை | பிரதோச விரதம் |
| 22-05-2001 - | செவ்வாய்கிழமை | அமாவாசை விரதம் |
| 26-05-2001 - | சனிக்கிழமை | சதுரத்தி விரதம் |

| | | |
|---|---|---|
| 28-05-2001 - | திங்கட்கிழமை | சஷ்டி விரதம் |
| 03-06-2001 - | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி விரதம் |
| 05-06-2001 - | செவ்வாய்க்கிழமை | பௌர்ணமி விரதம் |
| 10-06-2001 - | ஞாயிற்றுக்கிழமை | சிரவணவிரதம் |
| 17-06-2001 - | ஞாயிற்றுக்கிழமை | ஏகாதசி விரதம் |
| 18-06-2001 - | திங்கட்கிழமை | பிரதோச விரதம் |
| 20-06-2001 - | புதன்கிழமை | அமாவாசை விரதம் |
| 24-06-2001 - | ஞாயிற்றுக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 26-06-2001 - | செவ்வாய்க்கிழமை | குமரசசஷ்டி விரதம் |
| 27-06-2001 - | புதன்கிழமை | ஆனி உத்தரம் |
| 01-07-2001 - | ஞாயிற்றுக்கிழமை | சயனஏகாதசி விரதம் |
| 02-07-2001- | திங்கட்கிழமை | சோமப்பிரதோஷம் விரதம் |
| 02-07-2001- | செவ்வாய்கிழமை | பவித்ர சதுர்த்தசி |
| 04-07-2001- | புதன்கிழமை | பௌர்ணமி விரதம் |
| 07-07-2001- | சனிக்கிழமை | சிரவண விரதம் |
| 09-07-2001- | திங்கட்கிழமை | சங்கடகர சதுர்த்தி விரதம் |
| 15-07-2001- | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை விரதம் |

துர்க்கை அம்மன் ஆலயத்தில் கடந்த மூன்று மாதங்கள் நடைபெற்ற முக்கிய விழாக்கள்:

## தைப் பொங்கல்

*14-01-2001* ஞாயிற்றுக் கிழமை காலை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது. காலை *8.00* மணிக்கு பொங்கலுடன் ஆரம்பமாகி பகல் சங்காபிசேகத்துடன் விசேட பூசையும் நடைபெற்றது. நாம் தாயகத்தில் இருக்கும்போது நமது வீட்டு முற்றத்தில் கோலமிட்டு பொங்கல் பொங்கி கொண்டாடுவது வழக்கம், ஆனால் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நாங்கள் வீட்டு முற்றத்தில் கோலமிட்டு பொங்க முடியாத நாம் இவ்விழாவை ஆலங்களில் கொண்டாடுகிறோம். தை மாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபடும் விழா தைப்பொங்கல் விழா எனப்படும். ஆரம்ப காலங்களில் உழவர் திருநாளாக இருந்த தைப்பொங்கல் விழா நாளடைவில் தமிழ் மக்களின் பொது விழாவாக மாற்றமடைந்தது. சூரியனுக்கு பொங்கல் வைப்பதால் இதைச் சூரிய பொங்கல் என்றும் அழைக்கப்படும்.

## மகர ஜோதி

*14-01-2001* ஞாயிற்றுக் கிழமை மாலை ஐயப்பனுக்கு மகர ஜோதிப் பூசை மலையாள சகோதரர்களினால் வெகு பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது. அன்பே உருவமான பரமேஸ்வரனுக்கும் சௌந்தர்யமே வடிவமான மஹாவிஷ்ணுவுக்கும் புத்திரனாக அவதரித்தவர் ஹரிகரபுத்திரன், ஐயப்பன். ஐயப்பனின் திருக்கோவில் சபரி மலைமீது இருக்கிறது. காட்டு வழியில் கரடுமுரடான, கல்லும் முள்ளும் நிறைந்த பாதை முடிவில் இருக்கிறது. அதை அடைய இவற்றை பொருட்படுத்தாமல் பக்தி உணர்வுடன் வழிநடந்தாக வேண்டும். வாழ்க்கையில் கர்ம சிரத்தையுடன் பக்தியுணர்வை மேற்கொண்டு நடந்தால்தான் முக்தி கிட்டும் என்பதைக் காட்டுகிறது. இப்படியே ஐயப்பனின் யாத்திரைத் தத்துவம், சபரிமலை தத்துவம், பதினெட்டாம் படிதத்துவம், இருமுடியின் புனிதத்தன்மை, ஐயப்பனின் திருமேனித்துவம், நெய் அபிசேகம், மகரஜோதி தரிசனம் என்பனவற்றின் தத்துவ விளக்கங்களாகும். “ சுவாமியே சரணம் ஐயப்பா ”.

## தைப் பூசம்

*06-02-2001* செவ்வாய்க் கிழமை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பகல் சங்காபிசேகமும் இரவு விசேட அபிசேகமும் நடைபெற்றதுடன், இரவு காவடி நடனமும் நடைபெற்றது. தைபிறந்து பொங்கல் கொண்டாடியதை அடுத்து தை மாதப் பௌர்ணமி அன்று வருவது தைப் பூசம். இது சிவ பெருமானுடைய திரு நிருத்தத்தை நினைவு கூறுவதாக இருந்தாலும், பொதுவாக முருகப் பெருமானுடைய ஆலயங்களில் பெருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இந்நாளின் சிறப்புப்பற்றிப் பூம்பாவைப் பதிகத்தில் ஞானசம்பந்தரும் “ தைப்பூச விழாக் காணாது போதியோ பூம்பாவாய் ” என்று கூறுவதனால் அறியலாம். நமது நாட்டில் புதிதாக விளைந்த நெல்லை அரிசியாக்கி அறுசுவை உணவு சமைத்து உண்டு மகிழ்ந்தோம். இங்கு எமது அன்னையின் ஆலயத்தில் காவடியாட்டத்தை காணக்கிடைத்ததும், புதிர்கிடைக்கப்பெற்றதும் நாம் செய்த பாக்கியமே.

## மஹா சிவராத்திரி

21-02-2001 புதன் கிழமை சிவராத்திரி அனுஷ்டிக்கப்பட்டது. அன்றய தினம் இரவு நான்கு சாமப் பூசைகள் நடைபெற்றதுடன், இரவு கலை நிகழ்சிகளும் நடை பெற்று அடுத்த நாள் காலையில் பாறணையும் அனுஷடிக்கப்பட்டது. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் சிவபெருமான். சிவனுக்குரிய விரதங்களில் சிவராத்ததிரி விரதம் முதன்மையானது.
பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும் இடையில் யார் பெரியவன் என்று ஏற்பட்ட சர்ச்சையில் நான் என்ற செருக்கு உண்டாகி போட்டி ஏற்பட்டது. இவர்களின் இறுமாப்பை அகற்றி நல்லறிவு புகட்ட இறைவன் திருவுளம் கொண்டு ஆதியும் அந்தமும் இல்லாத ஜோதி வடிவாகத் தோன்றி அறிவு புகட்டியதையே சிவராத்திரி விரதமாக நாம் அனுஷ்டிக்கிறோம்.

## மாசிமகம்


08-03-2001 வியாழக்கிழமை இரவு துர்க்கை அம்மன் ஆலயத்தில் அடியார்களினால் பக்தியோடு அனுஷட்டிக்கப்பட்டது. இதில் ஐம்பதுக்கு மேற்பட்ட அடியார்கள் பால்காவடி எடுத்து விரதம் இருந்தனர். மாசி மாதத்தில்வரும் மக நட்சத்திரத்தோடு கூடிய புண்ணிய காலம் மாசி மகம் எனப்படும். இத்தினத்தில் தீர்த்தமாடுதல் இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டுதல் விசேடமாகக் கொள்ளப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வருணபகவான் ஆழ்கடலில் அமிழ்ந்து துன்பங்களை அனுபவித்தான். தேவர்களின் வேண்டுதலின் பேரில் சிவபெருமான் மாசிமக நாளில் சமுத்திரத்திலிருந்து வர்ணனை எழுந்து வரச் செய்தார். இத்தினத்திலே புண்ணிய தீர்த்தங்களில் நீராடுபவருடைய பாபத்தைப் போக்கி முத்தி கொடுத்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

இறைவன் திருவருளால் ஒரு முறை உமாதேவியார் பூமியில் தட்சனின் மகள் தாட்சாயினியாகத் திருஅவதாரம் செய்தாள். காளிந்தி நதியில் அம்பிகை ஒரு தாமரைப்பூவில் வலம்புரிச்சங்கு வடிவாய் இருந்தாள். மாசிமகத்தில் தட்சன் வேதவல்லியோடு நீராட வந்தபோது வலம்புரிச்சங்கைக் கண்டு எடுத்தான். அது ஒரு அழகிய பெண்குழந்தையாயிற்று இறைவியே குழந்தையாக இப்புவியில் அவதரித்த அற்புதநாள் மாசிமகம் ஆகும். இப்புண்ணிய தினத்திலே அடியார்கள் பாற்குடக் காவடி எடுத்து எல்லாம் வல்ல சக்திக்குத் திருமஞ்சன நீராட்டுவிழாக்கண்டு புண்ணியமெய்துகின்றனர்.

குமுதம் பக்தி
மார்ச் 2001

கனடா

# வான்கூவர் துர்க்கா தேவி



'ஓம் துர்க்காதேவி ஆலயம்' என்று அழகான தமிழில் கோயிலின் வாசலில் ஒரு போர்டு. கோயிலின் வெளிப்புறச் சுவர் முழுவதும் நீளத்தில் பட்டை பட்டையாக செங்காவி வர்ணமும் மற்ற இடங்களில் வெள்ளை வர்ணமும் தீட்டப்பட்டு இருக்கிறது. இவற்றை எல்லாம் பார்க்கும் போது நமக்கு மிகவும் பரிச்சயமான கோயிலைப் பார்ப்பது போல தெரிகிறது.

ஆனால் இந்தக் கோயில் இருப்பது கனடா நாட்டில், வான்கூவர் என்ற நகரின் அருகில், பர்னபி என்கிற இடத்தில். கோயில் தினசரி மதியம் 12 முதல் 2 மணி வரையிலும் இரவு 7.30 முதல் 10:30 வரையிலும் திறந்திருக்கும். கோயிலின் உள்ளே நுழைந்ததும் குளிருக்காக கனடா தேசத்தில் ஆண்களும் பெண்களும் வழக்கமாக அணிந்து கொள்ளும் ஸ்வெட்டர்கள், அதற்குமேல் குளிருக்கான ஜாக்கெட், தொப்பி, கிளவுஸ், ஷூக்கள் ஆகியவற்றை கழற்றிவைக்கும் இடம் இருக்கிறது. இந்தக்

குமுதம் பக்தி
மார்ச் 2001

கோவிலுக்கு வரும் ஆண்களும் பெண்களும் இவற்றை எல்லாம் கழற்றி இங்கே வைத்துவிட்டு கோவிலுக்குள் செல்கிறார்கள். கோயிலுள் நுழைந்ததும் ஒரு பெரிய குத்துவிளக்கும் இரண்டு பாவை விளக்குகளும் நம்மை வர வேற்கின்றன. ஹாலின் நடுவில் அழகான 'சாண்டிலியர்'. தரை முழுவதும் சிகப்பு, நீல நிறங்களில் கார்ப்பெட்டுகள் விரிக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு ஒருவர், 'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு' என்று தொடங்குகிற திருஞான சம்பந்தரின் தேவாரத்தை ஜெராக்ஸ் காப்பியாக வைத்துக் கொண்டு பாடிக் கொண்டிருந்தார். அவரது நெற்றியில் பட்டை பட்டையாக திருநீறு. பாடிய பாட்டிற்கும் அவரது முகத்தோற்றத்திற்கும் பொருத்தமாக இருந்தது.

தொடர்ந்து பலரும் தேவாரம், திருவாசகம் இன்னும் பல பக்திப் பாடல்களைப் பாடுகிறார்கள்.

கோயிலில் நடுநாயகமாக துர்க்காதேவி இருந்து அருள் பாலிக்கிறார். அருகில் இரண்டு பெரிய ஆளுயர குத்துவிளக்குகள். திருமுடியில் கிரீடம் அணிந்து, திரிசூலம் தரித்து ஆபரண அலங்காரங்களுடன் சாந்தமாக காட்சி தருகிறார்.

வலதுபக்கம் கணபதியும், இடது பக்கம் வள்ளி தெய்வானையுடன் திருமுருகனும் அருள் புரிகின்றனர். இன்னொரு இடத்தில் கலச பூஜை நடக்கிறது. தெய்வங்களை கலசத்தில் ஆவாகனம் செய்து கலச பூஜை செய்கிறார்கள்.

அருகில் இரண்டு அகலமான அலுமினிய ஃபாயில் கொண்டு செய்த இரண்டு குழிவான தட்டுகளில் தேனில் கலந்த முந்திரி, திராட்சை, பேரீச்சம் பழம் இன்னும் இதர உலர்ந்த பழங்களின் கலவை நைவேத்தியமாக வைக்கப்பட்டுள்ளது.

இன்னொரு இடத்தில் ஐயப்பன் நடு நாயகமாக வீற்றிருக்கிறார். அவரது எதிரில் பதினெட்டு படிகள் இருக்கின்றன. ஒவ்வொரு படியிலும் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றது. மண்டல பூஜைக்காக ஐயப்பன் நடை திறக்கும் சமயங்களில் இங்கும் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை விசேஷ பஜனைகள் நடக்கின்றன. ஏராளமான பேர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் தொலை தூரங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து பஜனை பாடல்களைப் பாடுகிறார்கள்.

ஐயப்பனை அடுத்து வைரவரைக் குறிக்கும் திரிசூலம் இருக்கிறது. இடது பக்கம் நடராஜர் விக்கிரகம் இருக்கிறது. அடுத்து உள்ள இடத்தில் தேவாரம் பாடிய அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர் படங்களும், திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகரின் திருவுருவப் படங்களும் இருக்கின்றன.

இதனைத் தவிர இந்தக் கோயிலின் வளர்ச்சிக்கு ஆசி அளித்து ஆதரவு தந்து வரும் குருதேவர் சிவாய சுப்ரமுனிய சுவாமிகளின் திருவுருவப்படமும் அவருடைய குருவின் (யோக சுவாமிகள்) திருவுருவப் படமும் இருக்கிறது.

ஆரம்பத்தில் இந்தக் கோயில் ஒன்றிரண்டு குடும்பங்கள் பிரார்த்தனை செய்யும் இடமாக இருந்தது. பிறகு எட்டு மாதத்திலேயே சில குடும்பங்கள் என்கிற நிலைமை மாறி பலரும் பிரார்த்தனை செய்யும் ஒரு கோயிலாக மாற, அன்னையின் அருளும் பக்தர்களின் முயற்சியும் உதவின. இன்று எல்லா விசேஷ தினங்களும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. காவடி ஆட்டம், தேர் இழுத்தல் முதலியவையும் உண்டு. தினமும் அன்னதானம் உண்டு. குழந்தை பிறந்தது முதல் பல்வேறு கால கட்டங்களில் நடத்தப்படும் பலவிதமான



குமுதம் பக்தி
மார்ச் 2001

சடங்குகளையும் கோயிலிலேயே செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டு இருக்கிறார்கள், இங்கே வாழும் தமிழர்கள். பல திருமணங்கள் இங்கே நடக்கின்றன. இதர மதத்தினரைச் சேர்ந்தவர்களும் இந்தக் கோயிலுக்கு அடிக்கடி வருகிறார்கள். விழாக்களுக்கு நன்கொடை தருகிறார்கள்.

ஆலயத்தின் சார்பாக துர்க்கா மஞ்சரி என்கிற நூலையும் சில விசேஷ வைபவங்களை ஒட்டி வெளியிட்டு வருகிறார்கள். ஓர் ஆலயமானது தெய்வ வழிபாட்டுடன் மட்டும் நின்று விடாது, ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டைப் பேணி வளர்ப்பதற்கும், எதிர்கால சந்ததியினரை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பதற்கும், உதவ வேண்டும் என்ற கருத்துடன்

## நான் சொல்லும் ஸ்லோகம்



பூ கொண்டு வா பொருள் கொண்டு வா
போதுமென்ற அளவு பொன் கொண்டு வா
நாளை வரும்போது நன்மை கொண்டு வா
கணக்கில்லாத பல கலைகள் கொண்டு வா
தேவி! பராசக்தி!

- ஸ்ருதி ஜெய்க்குமார்,
சென்னை.

துர்க்கை அம்மன் ஆலயத்தில் பஜனைகள், சமய வகுப்புகள் யோகா வகுப்புகள் முதலியவற்றை நடத்தி வருகிறார்கள். தமிழும் கற்றுத்தரப்படுகிறது. நாற்பதுபேர் இந்த வகுப்பில் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

இங்கு பாடப்படும் தோத்திரப் பாடல்கள், பண்ணிசைகள், வேத மந்திர ஒலிகள், நறுமணம் கமழும் மலர்கள், தீப ஆராதனைகள், பயபக்தியோடு கூடிய ஆலய குருக்களின் பூஜைகள், மனதை தூய்மையாக்கி, பக்தி எழுச்சியை உண்டாக்கி தெய்வீகச் சூழலிலே ஆன்மாவை இறைவனிடத்து லயப்படவைக்கும்.

- கமலநாதன்

# அறிவுக்கு விருந்து

1 நமக்கு தேவையானவற்றை எல்லாம் கடவுளிடம் வேண்டலாம். ஆனால் வேண்டுவதற் கெல்லாம் நாம் கவனமாய் உழைத்தல் அவசியம்.

2 நல்லவர்களும் ஞானிகளும் சிலசமயங்களில் உலகைக் கோபிக்கலாம் சிலசமயங்களில் அதற்காக வருந்தலாம், ஆனால் உலகில் தம் கடமையை சரிவரச்செய்யும் எவரும் ஒருபோதும் உலகின் மீது அதிருப்தி கொள்ளுவதில்லை.

3 சோகமான இதயம் ஆன்மாவை வறளச் செய்கிறது. இனிமையான இதயம் சிறந்த மருந்தாக இருந்து நம்மைக் குணப்படுத்துகிறது.

4 மன அமைதியான மணவாழ்வு இவ்வுலகில் சொர்க்கலோகம். பூசல் நிறைந்த மணவாழ்வு இவ்வுலகில் நரகம்.

5 வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாமல் உறுதியாய் இருப்பவர்கள், நீர்இல்லாத கப்பல் போன்றவர்கள். உறுதியில்லாமல் வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாதவர்கள் கப்பல் இல்லாத நீர்போன்றவர்கள்.

6 தீமைக்கு தீமை செய்வது மிருககுணம். நன்மைக்கு நன்மை செய்வது மனிதகுணம். தீமைக்கு நன்மை செய்வது தேவ குணம்.

7 வுாழவில் இருளான சமயம் ஏற்பட்டால் தளர்ந்து போகாதீர்கள். ஒளிமயமான சமயத்தை ஞாபகபடுத்திக் கொள்ளுங்கள்.

8 வாழ்க்கை என்பது நம்பிக்கையில் கொடுக்கப்பட்ட வில்வித்தை விளையாட்டை போன்றது. செயல் என்ற அம்பை எவ்வளவு உறுதியுடன் வீசுகிறோமோ, அந்த அளவு வெற்றி கிடைக்கும் இறைவன் உதவிசெய்வார் என்ற நம்பிக்கையுடன் அம்பை எய்தினால் வெற்றி துளைத்துக் கொண்டு வந்து சேரும். ஏனவே உறுதியுடன் இலக்கை நோக்கி அம்பை எய்துங்கள்.

9 நல்ல பண்புகள் உள்ளத்தின் வளமான செல்வங்கள் ஆனால் அவை மேம்பட்டுத் துலங்கச் செய்வதற்கு நல்ல வளர்பபு மிகஅவசியம்.

10 நூல்களை படிப்பதில் விருப்பமில்லாத அரசனாயிருப்பதை விட ஏராளமான நூல்களுடன் ஏழையாக வாழ்வதை அறிஞர்கள் விரும்புவர்.

11 புல பெரிய செயல்கள் வல்லமையால் நிறைவேறுவதில்லை விடாமுயற்சியிலேயே நிறைவேறுகின்றன.

12 வாய்மைக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் வாய்மையை தியாகம் செய்து வீடாதீர்கள்.

13 சிறந்த புத்திமதியை நாம் உடனே மனதில் வாங்கிக்கொண்டால் அது சொந்த ஆற்றலை வளர்க்க அதிகம் உதவி செய்யும்.

14 அன்புடன் கூர்மையான அறிவும் சேர்ந்துவிட்டால் அதனால் அடைய முடியாதது உலகில் எதுவுமில்லை.

15 ஒழுங்கு வீட்டுக்கு அழகு திருப்தி வீட்டுக்கு ஆசி, விருந்தோம்பல் வீட்டுக்குப்புகழ், அறவாழ்கை வீட்டுக்கு ஆபரணம்.

- நன்றி -

தொகுப்பு இணுவைக் குமரன்

## பரப்பிரமமாக இருப்பவள் அன்னை
## இதுவே பெண்மையின் தத்துவம்

பிரபஞ்சத்தில் ஜிவராசிகளின் ஜனனமும் மரணமும் நிமிடத்துக்கு நிமிடம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. சூரியன் உதிப்பதும் மறைவதும் இயற்கையின் நியதியே. உலகில் நடப்பவை அனைத்தும் இயற்கையின் நியதி எனக் கூறிக்கொள்கிறோம். இவ்வாறான இயற்கை எங்கிருந்து வருகின்றது? யாரால் இயக்கப்படுகின்றது? என்றால் இதனை நடத்த ஒரு சக்தி வேண்டும், இச்சக்தி அகில அண்டங்களையும் காக்கும் பரப்பிரமமாக நிற்கும் அன்னையினதாகும். உயிருள்ள ஜீவராசிகள் அனைத்தும் அன்னையின் படைப்புக்களே.

மனிதனை மனிதனாகத் தெளிவு படுத்த எலும்பும் தசைநார்களும் அமைகின்றன. எலும்புடன் தசையும் நரம்புகளும் சேர்ந்தே மனிதனுக்கு உருவத்தைக் கொடுக்கின்றன சிவன் இன்றேல் சக்தியில்லை, சக்தியின்றேல் சிவனில்லை. இதுவே சதான தர்மத்தின் கோட்பாடு. எலும்பு சிவனையும், சக்தி தசைநார்களையும் குறித்து நிற்பதால் எமது உடம்பே சிவசக்திவடிவானது. மனிதனின் ஒன்பது வாயில்களும் ஒன்பது சக்திகளாக அமைவதால் அம்பிகைக்கு ஒன்பது நாள் பூசையும் சிவனை குறித்து எலும்பு நிற்பதால் ஒரு நாள் பூசையாகவும் அமைகிறது. இதனையே முறையே நவராத்திரி என்றும் சிவராத்திரி என்றும் வழிபடுகின்றோம்.

ஸ்தூல, சூஷ்சும காரண இந்திரியங்களால் அடங்கியுள்ளசரீரம், முறையே ஆணவம், கன்மம், மாயை என்ற பந்த பாச சிறையுள் கட்டுப்பட்டு அவஸ்தை அடையாமல் இருக்க வழிவேண்டுமல்லவா! மும்மலங்களின் தத்துவத்தை உணர முடியாவிட்டால் வாழ்கையின் தத்துவத்தை அறிவது கடினம். லௌக்க வாழ்கையில் மாயையானது, எமது அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானம் அடையமுடியாமல் மறைத்து விடுகின்றது. எப்படியெனில் உலகப்பற்றென்னும் மாயையானது எம்மைப் பற்றிக் கொள்ளவும் எம்மையே நாம் மறந்து விடுகின்றோம். ஏது உண்மையான தத்துவம், என அறியாமல் அலை கடலில் அகப்பட்டுக் கரைகாணாது தத்தளிக்கின்றோம். மாயையே நான் என்னும் ஆணவத்தை உண்டாக்கி கர்மவினைக்கு ஆளாகின்றது.

எமக்கு நிம்மதி வேண்டி அன்னையின் இருப்பிடம் நாடுகின்றோம். அன்னையின் முன் எமது குறைகளைக் கூறும்பொழுது குழைந்தையாகி விடுகின்றோம். மனத்தை அவன்பால் லயப்படுத்தக் கைகூப்பி கண்ணீர்மல்க நிற்கும் முறையை கையாளுகிறோம். கைகூப்பி நிற்பதன் அர்த்தம் என்ன? ஒருகரத்தில் அறிவென்னும் மௌனத்தையும் மறு கரத்தில் பொறுமை என்னும் அஹிம்ஸத்தையும் இணைத்து நிற்பதை அன்னை அறிவாள் அல்லவா! அன்னையே உன்னருள் அறியாத உள்ளங்கள் இன்னும் அகிலத்தில் உண்டோ?.

மௌனமும் பொறுமையும் லௌகீக வாழ்க்கை என்னும் படகு சமுதாயக்கடலில் அமைதியாக செல்வதற்கு அவசியம் தேவைப்படுகிறது. மனிதனை ஆன்ம ஈடேற்றத்திற்கு ஏற்றிச்செல்லும் வழி இவை மூலம் கிடைக்கிறது. மௌனம் என்றுசொல்லும் பொழுது நாவடக்கம் முக்கிய இடத்தைப் பெறுகிறது." நாகாக்க காவாக்கால் " என்னும் குறளில் விளக்கியுள்ளார். ஞானிகளும் யோகிகளும் ஆன்மஈடேற்றத்தில் பரிணாமவளர்சியைப் பொறுமையினாலும் மௌனத்தினாலும் அடைந்துள்ளனர்.

பரப்பிரம்மமாக வீற்றிருக்கும் அன்னையவள் காருண்யம், அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை என்ற நான்கு குணங்களையும் உள்ளடக்கியுள்ளாள். இதனாலன்றோ அடியார்கள் செய்யும் குற்றங்களை தன்னகத்தே ஏற்று அருள் சுரக்கின்றாள். அவளுக்கு நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற பேதம் கிடையாது. சங்ககாலங்களிலும், புராணங்களிலும் அன்னையின் படைப்பு எமக்கு பலவழிகளில் எடுத்துக் காட்டாக விளங்குகினறது.

தாயின் அர்த்தமென்ன? குழைந்தை பெற்றால்தான் தாயின் ஸ்தானத்தை அடைவோம் என்ற மூட நம்பிக்கையைத் தவிர்த்து எவருக்குத் தாய்மையின் குணங்கள் உள்ளதோ அவர்கள் அனைவரும் அம்பிகையின் வழித்தோன்றலே எனப் போற்றவேண்டும். இவை உலகறிந்த உண்மையல்லவா ஆண்மையிலும் பெண்மை அடங்குகின்றது. சிவபெருமானே தாயாகத்தோன்றி திருஞானசம்பந்தருக்குப் பால் ஊட்டியுள்ளார் என்று நாம் படித்துள்ளோம். சிவபெருமானே தாயாகத் தோன்றி பாலூட்டியுள்ளார் எனில் அன்னையின் பெருமைகள் எண்ணிலடங்கா.

அன்னை எங்கெல்லாம் கோவில் கொண்டுள்ளாளோ அங்கெள்ளாம் அவளின் அருள்மழை பக்தர்களுக்கு என்றென்றும் பொலிந்தவண்ணம் இருக்கும். நாம் பூர்வீகத்தில் புண்ணியம் செய்ததினாலேயே வன்கூவரில் துர்காதேவி ஆலயம் உருவாகியுள்ளது. காரியம் காரணமின்றி செயல்படாது. இதைப் போன்றே சக்தி கோவில்களும் அம்பிகையின் காரணத்துடன்தான் உருவாகின்றன.

பாரதநாட்டில் சக்திகோவில்களில் 51 ஸதலங்கள் இன்னும் சிறந்தவையாக இருக்கின்றன. தாஷாயணியாக இருந்த அம்பிகை தனது சிவனாக இருந்த கணவனை மதிக்காமல் ஹோமம் செய்வதை விரும்பவில்லை, அதனை அழிக்கமுற்பட்டாள் ஹோம குண்டத்தில் உடலை அர்ப்பணிக்க முயன்ற சமயம் விஷ்ணுவால் தடுக்கப்படடார். விஷ்ணு எய்தபாணத்தில் 51 துண்டுகளாகச் சரீரம் துண்டிக்கப்பட்டு 51 ஸ்தலங்களில் 51 பீடங்களாக அமைந்துள்ளாள். 51 பீடங்களும் 51 பீஜாட்சரங்களாக அவளுள் அடங்கியுள்ளன. இப்பீடங்களில் அம்பிகையின் சக்தி பரப்பிரமமாக பரிணாமிக்கின்றது.

எமது உடம்பின் சக்தி ஆறு ஆதார சக்திகளை உள்ளடக்கியுள்ளது. இவ் ஆறு ஆதாரசக்திகளிலும் 51 பீஜாட்சரங்களும் அடங்குகின்றன. இதுவே பெண்மையின் தத்துவம். லௌகீக வாழ்கையில் கோடானுகோடி செல்வங்கள் இருந்தாலும் நிம்மதி என்ற பொக்கிசத்தை உருவாக்க சக்தி வடிவில் இருக்கும் பெண்களாலேதான் முடியும். அம்பிகையே நான்கு குணங்களாகிய காருண்யம், அன்பு, பொறுமை, சகிப்புதன்மை ஆகியவற்றை உள்ளடக்கி செயல்படுகின்றாள் என்றால் பெண்மையாக இருப்பவள் இத்தத்துவத்தை அறியாமலா இருபாள்! ஜனனம் முதல் மரணம் வரை வாழ்ந்து பூரணத்துவம் எய்துவதே வாழ்கையின் குறிக்கோளாகும் இதுவே நாம் பரப்பிரமமாக விளங்கும் அன்னைக்குச் செய்யும் காணிக்கை.

துர்க்காதேவி சரணம்

லோகநாயகி சற்குணநாதன்

# பார்வதி கல்யாணம்

சென்ற இதழ் தொடர்ச்சி

அது உங்களுக்குச் சம்மதமானால் பார்வதிதேவியை சிவபெருமானுக்குச் கன்னிகாதானம் செய்து முடித்து வைப்பீர்களானால் உங்களுக்கும், உலகத்துக்கும் நன்மைகள் உண்டாகும் எனக்கூறினர். இதைக்கேட்ட பர்வதராஜன் இந்த விடயத்தில் தன் பத்தினியான மேனையின் கருத்தையும் அறிந்து கொள்ள வேண்டுமெனக் கூறித் தனது பத்தினியுடன் ஆலோசித்து அவளையும் இணங்க வைத்து சம்மதம் தெரிவித்தாள். பழங்களோடு மலர்களையும் தாம்பூலங்களையும் சப்த ரிஷிகளும் பர்வதராஜனும் ஒருவருக்கொருவர் திருமண நிச்சயார்த்தம் சொல்லி மாற்றிக் கொண்டார்கள். அப்போது மேனை கண்ணீர் வடித்தாள். கண்ணீர் வடித்த மேனைக்கு, அருந்ததி சிவபெருமானின் சிறப்புக்களைக் கூறி ஒருவாறு தேற்றிக் கொண்டாள். திருமண நாளும் குறித்தாயிற்று.

சப்த ரிஷிகள் சிவபெருமானை அணுகி நடந்தவை யெல்லாவற்றையும் கூறித் திருமண நாளையும் கூறினர். கலியாண நாளன்று சிவபெருமான் திருக்கைலாசமலையிலிருந்து புறப்பட்டு தேவர்களையும், சப்தரிஷிகளையும் நோக்கி நீங்கள் அனைவரும் எனக்கு முன்னே செல்லுங்கள் என்று பணித்தார். இந்திரன் காளாஞ்சி ஏந்த, ஈசானன் ஆலவட்டம் வீச, அக்கினி தூபம் ஏந்த, வருணன் பூரண கும்பம் தாங்க, குபேரன் நவமணிகள் தூவ, குண்டோதரன் குடை பிடிக்க, சிவபெருமான் விகரை முகம் கொண்ட மாப்பிள்ளைக் கோலத்துடன் ரிஷிப வாகனத்தில் அமர்ந்த வண்ணம் இமயமலையை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்.

பர்வதராஜன் தன் குமாரியை கன்னிகாதானம் செய்ய மங்களஸ்நானம் செய்வித்து கலியாணத் திருக்கோலத்திற்கேற்ப அலங்கரித்து தேவ பூசைகளைச் செய்வித்து மணமகனான சிவபெருமானின் வருகையை எதிர்பார்த்திருந்தான். மணக் கோலத்து மகேஸ்வரர் சைதன்யங்களோடும் தேவர்களோடும் சப்தரிஷிகளோடும் ஊர்வலமாக வருவதைக் கேள்வியுற்ற பர்வதராஜன் உடனே தன் பரிவாரங்களுடன் எதிர் கொண்டு மருமகனாரையும் அவரது பரிவாரங்களையும் வருக, வருக, என வாழ்த்தி வரவேற்றான். பர்வதராஜனின் மனைவியான மேனை நாரதருடன் மேல் மாடியிலுள்ள உப்பரிகையின் மேல்நின்று தன் மகளுக்கு வரப் போகும் மாப்பிளையைக் காணவேண்டுமென்ற ஆசைமேலீட்டால் கற்பனை உலகத்தில் மிதந்து எவ்வளவு அழகனாக இருப்பார் அவருக்காக எனது அருமைச் செல்வி பார்வதி தவம் செய்தாளே, இவ்வளவு சேனைகளும் பார்க்குமிடத்து அவர் பெரிய நாயகராகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

சிவபெருமானே அதி அழகான தேவமங்கையர்கள் புடைசூழ, தேவர்களும், காந்தவர்களும் விருதுக் கொடிகளேந்தி அலங்காரப்படுத்த, அழகிய மங்கையர்கள் தாமரை வீச, வீதிவலம் வந்து கொண்டிருக்கிறார். முதன்முதலில் விசுவாசு என்ற அழகிய கந்தர்வராஜனை கண்ட மேனை அவனே சிவன் என்று மகிழ்ந்து என் மருமகன் பெண்கள் சேனையுடன் வருகிறானே! என்று நாரதரிடம் கூற நாரதரோ புன்சிரிப்போடு இல்லையே அது மாப்பிள்ளை யல்ல அவன் சிவசந்நிதியில் சங்கீதம் பாடுவானாயிற்றே என்றார். அதைக் கேட்டதும் மேனை இன்னும் அதிக உற்சாகப்பட்டு அந்த ஆண்அழகனே மாப்பிள்ளைக்கு ஊழியன் தான் என்றால் மாப்பிள்ளை சிவபெருமான் எப்படியிருப்பாரோ என்று நினைத்து மகிழ்ச்சியின் ஏணியில் ஏறினாள். அப்போது சேனைகளின் நடுவே வரும் குபேரனைக் கண்டாள். கண்டதும் மகிழ்ச்சி பொங்கி ஆகா! என்ன அழகு என்ன அழகு மகளுக்கேற்ற மணாளன்தான் என்று கூறி மதிமயங்கினாள். அதற்குள் வருணன் தான் சேனைகளுடன் வர ஒருவேளை அவன் தான் சிவனே என்றும், இந்திரன் தேவ மங்கையர்களுடன் வர அவன் அழகைக் கண்டு மயங்கியமேனை, நான் பார்த்த எல்லோரையும் விட இவனே சிறந்தவனாகக் காணப்படுவதால். இவன்தான் சிவபெருமானாக இருக்க வேண்டுமெனக் கருதி நாரதரின் முகத்தை மிகவும் குதூகலத்தோடு உற்று நோக்க அவர் அவள் கூறிய எவருமே சிவபெருமான் அல்ல என்று கூறினார். இந்த நேரத்தில் சூரியன் சகல தேவர்களும் புடைசூழ வருவதைக் கண்டு இவன் தானே சிவன் என மேனை நாரதரைக் கேட்டாள். அவனுமல்ல என்றார் நாரதர். அப்போது சந்திரன் சகல கிரகங்களுடனும் குனிந்த சாந்தியோடும் வருவதை மேனை கண்டாள். ஆகா! இவன்தான் சிவன் இவனே மருமகனானல் என் குலம்

முழுவதும் குளிர்ந்து நன்மையடையும் என்று நினைத்து நாரதரை நோக்க இவனும் சிவன் அல்ல என்றார். பிரமதேவர் சகல பிரம்ம ரிஷிகளோடும் வருவதை உற்றுப் பார்த்த மேனை இவன்தான் சிவனாக இருக்குமோ! என்று குழம்பினாள். இதற்கிடையில் மாக விஷ்ணு பல ஆபரணங்கள் அணிந்து கோடி மனமதர்களின் பேரழகோடு வருவதைக்கண்ட மேனை மகிழ்ச்சி மேலீட்டால். தன் மகளுக்குரியவன் இவன் தான் என்று நாரதரின் முகத்தைப் பார்த்துக்கூற நாரதர் இவனும் அல்ல என்றார். நாரதர் மேனையைப் பார்த்து சிவபெருமான் இவனைக் காட்டிலும் சிறந்தவர். அவர் அழகை வருணிக்க முடியாது என்று கூறி குறும்புச் சிரிப்போடு ஊர்வலத்தின் நடுவே வரும் சிவபெருமானைக் காட்டி இவரே சிவபெருமான் என்றார். மேனை மிகவும் ஆவலுடன் சிவபெருமானைப் பார்த்தாள். அவனைப் பின் தொடர்ந்து வரும் நொண்டிகள், ரோமமுடையோர், பிசாசுபிடித்த முகமுடையவர்கள் வருவதைக் கண்டு மேனை பயந்தாள். சிவபெருமானே ஐந்து முகங்கள், பத்துகரங்கள், மூன்று கண்கள், உடல் முழுவதும் வீபூதிப்பூச்சு, சடைமுடி, புலித்தோல் ஆடை, நாகம் என்ற வில்லு உடையவராய் எருது வாகனத்தின் மீது அமர்ந்து ஊஞ்சலாடுவது போல் சயனத்தில் இருந்தார். நாரதர் மீண்டும் மேனையைப் பார்த்து அதோ அவரே சிவபெருமான் என்று சுட்டிக்காட்டினார். ஊடனே மேனை திடுக்கிட்டு சூறாவளிக் காற்றில் அடிபட்டவள் போல் துக்க மேலிட்டால் 'ஆ' பார்வதி நீ என்ன காரியம் செய்துவிட்டாய் ஏய் நீ துன்மார்க்கி என்று கூறி நிலத்தில் வீழ்ந்து மூர்ச்சையடைந்தாள்.

சிறிது நேரம் கழித்த மயக்கம் தெளிந்து எழுந்த மேனை நாரதரைப் பார்த்து நாரதரே! நீர் எங்களை மோசம் செய்து விட்டீர். நாங்களும் உம் வார்த்தையை நம்பினோம். அருந்தவ முனிவர்களாலும் செய்து முடிக்க முடியாத அருந்தவத்தை பார்வதி செய்து முடித்தாள். அத்தகைய தவத்திற்கு இத்தகைய பயனையா அடையச் செய்தீர். நான் என் செய்வேன்! எங்கு போவேன்! கையில் விளக்கை வைத்துக் கொண்டு கிணற்றில் விழுந்து விட்டேனே! பார்வதியைத் திருமணம் பேசி வந்த சப்தரிஷிகள் எங்கே! அவர்களைக் கண்டால் தாடி மீசைகளைப் பிய்த்து விடுவேன். அவர்களுடன் வந்த அருந்ததியும் மிகக் கொடியவள். அவள் சொன்ன வார்த்தையாலல்லவா என் புத்திரி ஏமாந்துவிட்டாள். அன்னப்பறவைக்குப் பதிலாகக் காக்கையை பொற்கூட்டில் ஏற்றமுடியுமா? சகல தேவர்களையும் விட்டு விட்டு இந்த விகாரரூபியான இந்தச் சிவபெருமானை அடைவதற்கா இவள் இவ்வளவு பெரிய தவம் செய்தாள். நாரதரே! எங்கள் குலத்தை நாசப்படுத்தி விட்டீர், நொண்டிகளும்,பிசாசு பிடித்த முகவர்களும் இவரது பரிவாரங்கள்! இவற்றையெல்லாம் கண்ணால் பார்ப்பதை விட நான் உயிர் விடுவது மேல். இனி என் கணவர் முகத்தில் எப்படி விழிப்பேன். அப்போது நாரதர் மேனையைப் பார்த்து சிவபெருமான் நல்லவர் என்றார். மேனை கோபமேலீட்டாள் சீறிப்பாய்ந்து ஐயா! துஷ்டரே நீர் கொஞ்சம் தொலைவில் இரும். நீர் எனக்கு ஒன்றுமே சொல்ல வேண்டாம். என்று குமுறினாள். பலர் புத்திமதிகளைக் கூறியும் கேட்டபாடில்லை நான் ஆயுதம் கொண்டாவது என் பெண்ணைக் கொலை செய்வேனே தவிர இந்தச் சாம்பல் பூச்சுக்கார ஆண்டிக்கு ஒரு போதும் என் பெண்ணைக் கொடுக்க மாட்டேன். என்றாள். கொடூர முகம், அழகே இல்லாதவன், கரியன் இவனுக்கு எப்படி என் பெண்ணைக் கொடுக்க முடியும் என்று குமுறினாள். அப்போது பர்வதராஜன் அங்கு வருகிறான். இவளின் கோலத்தைக் கண்டவன் அவளை அணுகி மேனகா நீ துக்கப்படாதே எல்லாம் நன்றாக நடைபெறும். விவாக காரியம் இனிது நடக்கட்டும் என்று கூறினான். மேனைக்கு பர்வதராஜனின் ஆலோசனையும் திருப்தியளிக்கவில்லை. கோபமேலீட்டால் பர்வதராஜனைப் பார்த்து என் நாதா! பார்வதியின் கழுத்தில் ஒரு பாறாங்கல்லைக் கட்டி கடலில் இடுங்கள் என்றாள்.

இந்த நேரத்தில் பார்வதி அங்கு வருகிறாள். தன் தாயின் கொடூர சிந்தனைகளையும் பிடிவாதத்தையும் கண்டு தாயே! உமக்கு இந்த விபரீதபுத்தி எங்கிருந்து தோன்றியது. சாம்பமூர்த்தி,சார்வோதயர், அவர் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன்,ஆகியோர்களுக்கும் முதலானவர். நான் அவரையே யன்றி வேறு திருமணம் செய்யமட்டேன் என்றாள். பார்வதியின் வார்த்தைகளைக் கேட்ட மேனை " அடி பெண்ணே ! உன்னைப் பெற்றவளை மீறிப் பேச வல்லவளாகி விட்டாயோ" இனி உனக்கு விஷமூட்டுவேன் அல்லது கத்தியால் வெட்டி உன்னைக் கொலை செய்வேன். அல்லது நானாவது எனது உயிரை மாய்த்துக் கொள்வேன் என்றாள். ஆ! இது என்ன அநியாயம். எனக்கு மருமகனாக வரப் போகிறவனது இல்லத்தை விசாரித்தால் தாய்,தந்தையர், உறவினர், உடன்பிறந்தோர், யாருமிலர். நல்லவீடு, நல்லஆடை, யோக்கியமான நண்பர்கள், நல்ல வாகனம், வாலிபம், செல்வம் யாதும் கிடையாது. என் மகள் எதைக் கண்டு மையல்

கொண்டாளோ தெரியவில்லை. என்மகளை இந்த அருகதையற்றவனுக்கு எப்படிக் கொடுப்பது என்று புலம்பினாள்.

சர்வமும் அறிந்த சிவபிரானிடம் நாரத முனிவர் சென்று மணமகனாரே! நாங்கள் ஒவ்வொருவரும் உம் விஷயமாக உமது மாமியாரான மேனையிடம் பலவிதமாகவும் இகழ்ந்து ஏளனம் செய்யப்பட்டோம். இனியாவது உங்கள் திருமுகத்தைக் காட்டி விடவும் என்றார். சிவபெருமான் திவ்விய திருவடிவத்தோடு தோன்ற மேனையை நோக்கி நாரதர். உமது பேரழகுடைய மருமனைப் பார் என்று கூற மேனை சிவபெருமானின் கோடி சூரியர்களின் ஒளியை ஒத்த திருவுருவத்தைக் கண்டு மயங்கி சித்திரப்பதுமை போல் அசைவற்று ஒன்றுமே செய்வதறியாது திகைத்து நின்றாள். இவரை மணாளனாக அடைய என் மகள் பார்வதி மகா புண்ணியவதி என்று கூறி திருக்கலியாண மண்டபத்தில் வைத்து சகலர் முன்னிலையிலும் பார்வதராஜனும் மேனையும் தங்களது மகள் பார்வதியை சிவபெருமானுக்குக் கன்னிகாதானம் செய்து திருமணம் முடித்து வைத்தனர்.

பொ.பாலசிங்கம்

உ

சிவமயம்

# சைவநீதி

ஞானசிரோன்மணி
திருமதி. பூமணி குலசிங்கம்
கொழும்பு.

"அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்று பாடினார் ஔவைப்பிராட்டியார். இறைவனது பல்வேறு படைப்புகளில் மனிதனே உயர்நிலையிற் காணப்படுகின்றான். காரணம் மனிதனுக்கு மட்டுமே சிவனடி சேரக்கூடிய தகைமையுண்டு. உயிர்கள் யாவும் உணவு தேடுவதும் இனத்தைப் பெருக்குவதும், உயிர் பிழைப்பதையுமே நோக்காகக் கொண்டுள்ளன. ஆனால் மனிதன் சற்று வேறுபட்டவனே. அவனிடம் மனமும் சிந்திக்குமாற்றலும் பேச்சுவன்மையும் உண்டு. தனித்து வாழவோ அல்லது பிழைக்க மட்டுமோ தோன்றியவனில்லை. சமூகத்தில் பிறருடன் கூடிவாழ்ந்து நெறிமுறையான வாழ்வை மேற்கொள்ள ஓர் கலாச்சாரப் பண்பாடுண்டு.

இறைவனடி சேர்வதே சைவசித்தாந்தர்களின் நோக்கமாகும். இக்குறிக்கோளை அடையும் வழிமுறைகளையும் மார்க்கத்தையுமே சமயம் காட்டுகின்றது. எனவே எமது சமயம் வெறும் நம்பிக்கைகளையும், கிரியைகளையுங் கொண்டதல்ல. மனம் என்னும் கருவியினால் ஆணவமலத்தை நீக்கி, அறவாழ்வைத் தழுவி, ஆன்மிக மேம்பாட்டிற்கு அல்லது ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது. நல்லது தீயது, சரியானது தவறானது என்று அறிந்துவிட்டால் மட்டும் போதாது. அதனை வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் மனவலிமையினை உருவாக்கி, நடத்தையில் பழக்கமாக்கிக் கொள்வது அவசியம். இது அனுபவத்தால் பிறக்குமேயொளிய நூலறிவினாலோ போதனையினாலோ பிறப்பதன்று. இந்த அனுபவம் முழு நம்பிக்கையுடன் சிவவழிபாட்டு முறைகளை ஒழுங்காகவும், அயராத ஊக்கத்துடன் பின்பற்றுவதனாலுமே பிறக்கும்.

## இன்றைய பிரச்சனை:-

நவீன உலகில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், தொழில்நுட்ப விருத்தியும், மனிதனின் சமூக, பொருளாதார கலாசார வாழ்க்கையில் பற்பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. தான் வல்லவன், தன்னால் எதையும் சாதிக்கமுடியும் என்ற ஆணவம் தலைதூக்கியுள்ளது. பணமும் அந்தஸ்தும் முதலிடம் பெறுகின்றன. வாழ்க்கைத்தரம் பணத்தால் அளக்கப்படுகிறதே ஒளிய, நெறிமுறையான வாழ்வாலல்ல. சமயம் அகற்றமுயலும் ஆணவம் பதவி என்ற பற்றுகள் தழுவப்படுவதனால் ஒழுக்கவாழ்வு சீர்குலைகிறது. திருவள்ளுவரின் வாக்கு,

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" -என்ற வாக்கு அர்த்தமற்றதாகியுள்ளது.

இன்று சுயநலம், அநீதி, தெய்வநிந்தனை என்பன தலைவிரித்தாடுகின்றன. பொருள் சேர்க்கும் அவாவினால் போட்டி பொறாமை, அச்சம், நெறிபிறழ்வு, உளநோய், நரம்புத்தளர்ச்சி என்பன வளர்ச்சியுற்று வருவதை அவதானிக்கலாம். இத்தகைய போராட்டங்களினின்று தப்பிக் கொள்வதற்கு மனிதன் மதுபோதைக்கு அடிமையாகி வன்செயல்களில் இறங்கித் தனது மனஅமைதியினையும் இழந்து சமுதாய ஒற்றுமையினையும் ஒழுங்கு, அமைதினையும் சீர்குலைக்கின்றான். தனக்கும் சமூகத்திற்கும் பிரச்சனையினை உருவாக்குகின்றான். இந்த நிலையினைச் சீர்திருத்தச் சமயத்தை மையமாகக் கொண்ட அறவாழ்வே சைவநீதியே அவசியமாகும்.

## சித்தாந்தம் காட்டும் வழி:-

எமது சமயம் இறைவனும் ஆன்மாவும் நித்தியமானவை என்ற உண்மையினை வலியுறுத்துகின்றது. "பதியினைப்போல் பசுபாசம் நித்தியமானது" என்று திருமூலர் கூறுகின்றார். ஆன்மா பாசம் என்ற ஆணவமலத் தொடர்பினால் அறிவு முற்றிலும் இழந்துள்ளது. இந்த அறிவினைப் பெறும் பொருட்டே எமக்கு இந்த உடலையும் உட்கருவிகளையும், உலகையும் பரம்பொருளாகிய சிவன் கொடுத்துள்ளார். அரிசிக்குத் தவிடு இருப்பது போன்று ஆன்மா ஆணவ மலத்தாற் சூழப்பட்டுள்ளது. அரிசியை உலக்கையாற் குத்தித் தவிட்டைப்போக்குவதைப் போல ஆணவத்தை நீக்குவதற்கு விடாமுயற்சியும் வைராக்கியமும் கொண்ட வழிபாட்டு முறைகள் இன்றியமையாதன. இறைவன் நமக்குக் கொடுத்துள்ள தனு, கரண, புவன போகங்களுக்கு நன்றிக்கடனைச் செலுத்தி எம்மைப்பற்றியுள்ள மலத்தைப் போக்கச் சைவநீதியின் படிவாழ்வதற்கு அவசியமான மனத்தூய்மையினைப் பெறவேண்டும்.

இறைவனை இடையறாது கைகூப்பி வழிபட்டு நமஸ்கரித்து, அவர் புகழ்பாடி, அவர் அருளை நாடல் வேண்டும். முழுநம்பிக்கையுடனும், பக்தியுடனும் வழிபடும் போது ஆணவம் தேய்கிறது. மனத்தூய்மை, பணிவு, நேர்மை, அடக்கம் என்னும் சைவநெறி சுட்டும் சீலங்கள் சிறிதுசிறிதாக மலரும். இம்முயற்சி சிறுபிராயத்திலிருந்தே இடம்பெறவேண்டும். இதனையே சைவநீதி என்கிறோம்.

நால்வர் காட்டிய தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் இறைவனடி சேர்க்கும் அன்பு மார்க்கங்களாகும். "என் கடன்பணி செய்து கிடப்பதே" என்று அப்பர் சுவாமிகள் பாடினார். பிறரைத்தன் உயிர் போன்று மதித்து அவர்களுக்கு அன்புடன் செலுத்தும்பணி இறைபணியாகும் என்ற கருத்தை மாணிக்கவாசக சுவாமிகள் கொண்டுள்ளார். அன்புமயமான சிவப்பரம்பொருளை அடைய நாமும் அன்புமயமாதல் வேண்டும் என்கிறது சைவநீதி.

மனிதனின் உயர்விற்கும் தாழ்விற்கும் காரணம் அவனது மனம். மனம் பக்குவத்தைப் பெற, இறைபற்று, இறைநம்பிக்கை, இறைவழிபாடு, விரத அனுட்டானங்கள், தேவார திருவாசகம் ஓதுதல் என்ற செயன்முறைகளை சைவநீதிநெறிநின்ற ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

"ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என ஔவையார் பாடினார். வீடுகளில் தினமும் காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனம் செய்தல் நலம். மூத்தோரைப் பார்த்துச் சிறியோரும் இப்பழக்கத்தைப் பழகிக்கொள்வர். இறை வழிபாட்டின்பின் தூய சிந்தனையுடன் புரியும் கருமங்கள் யாவும் நன்மையினையே பயக்கும் என்கிறது சைவநீதி.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதன் பொருள் இறைவழிபாடின்றி ஒரு கருமமும் நிறைவுபெறதென்பதே. குருடனுக்கு ஊன்றுகோல் வழிகாட்டி போன்று மனிதனுக்கு உறுதுணை இறைவழிபாடாகும். இறைதுணையின்றி எதையும் சாதிக்க முடியாது.

கோயில்வழிபாடு, பிரார்த்தனை, அபிஷேகம், பூசைகளில் பங்குபெறல், தேவாரம் பாடுதல், திருநாமத்தை ஓதுதல், விழாக்கள், விரதங்கள் அனுஷ்டித்தல் தனிப்பட்டமுறையில் மனத்தூய்மையினையும் அடக்கம், பணிவு, மன அமைதியையும் தோற்றுவிக்கவல்லன. சிந்தனை, பேச்சு, செயலில் பிறர்நலங்கருதும் அறவாழ்விற்கு வித்திடும். இவற்றை நல்குவது சைவநீதி.

எமது தமிழ் இலக்கியங்களும் ஒழுக்கத்தையே மையமாகக் கொண்டுள்ளன. புராணங்கள், காப்பியங்கள்கூட ஆன்மிக விருத்தியினையே கருப்பொருளாகக் கொண்டுள்ளன. மனிதனைப் பக்குவப்படுத்தி நற்கருமங்களைச் செய்து, நற்பயனையே அடைவது மானிட நோக்காக ஞானிகளும், புலவர்களும் கருதினர். அதற்கேற்ப வாழ்க்கை முறையினையும் கலாசாரத்தையும் வளர்த்தனர். இவை மேன்மைகொள் சைவநீதியின் கருவூலங்களாகும்.

## முடிவுரை

எமது சமய வழிபாட்டுமுறைகள், விரதங்கள் விழாக்கள், பண்டிகைகள், கிரியைகள், சடங்குகள் யாவும் சைவநீதியை நிலைநாட்டும் வகையில் மனிதனைப் பக்குவப்படுத்தி நல்லொழுக்கப்பாதையிலேயே இட்டுக் செல்கின்றன. ஆணவமல நீக்கமே வாழ்வின் இலக்கு என்று தேசிக்கின்றது சைவநீதி. எனவே முழுநம்பிக்கையுடன் இறைவனை வழிபட்டு அவர்புகழ் பாடி அவர் அருளாலே மனத்தூய்மையினைப் பெறவேண்டும். இது சைவநீதி நெறிமுறை சார்ந்த வாழ்விற்கு இட்டுச் செல்லும். அப்பொழுது வீட்டிலும் நாட்டிலும் ஒற்றுமையும் இன்பமும் அமைதியும் நிலவும்.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

என்ற சைவநீதியும் நிலை பெறும்.

திருச்சிற்றம்பலம்

## இறைவனிடம் கூறுங்கள் நிவாரணம் கிடைக்கும்.

*-(ஸ்ரீ சதாசிவ பிரும்மேந்திரர்)*

நமக்கு வேண்டிய ஒருவரிடம் நமது துக்கத்தைக் கூறி மன ஆறுதல் அடைவது நமது வழக்கமாகி விட்டது. அவ்வாறு சாதாரண மனிதைரச்சார்ந்திராமல் சர்வசக்திவாய்ந்த இறைவனைச் சார்ந்திருக்குமாறு செய்வதுதான் உருவ வழிபாட்டின் நோக்கம்.

ஒரு சிறுவன் விளையாடிக் கொண்டிருக்கும்போது தனது நண்பன் அடித்துவிட்டால் அழுது கொண்டு அம்மாவிடம் போய்க் கூறுவான். சிறிது வயது முதிரும் பொழுதும் அம்மா அடித்ததையும் சகோதரன் ஏசியதையும் நண்பனிடம் கூறுவான். பின்னர் தன்னை நேசிக்கும் பெண்ணிடம் தனது துன்பங்களைக்கூறி ஆறுதல் பெற முயற்சிக்கின்றான். அப்பெண்மணியும் தன்னுடைய துன்பங்களை அவனிடம் கூறுகின்றாள். ஆனால் அங்குமிங்கும் துக்கத்தைக் கூறுவதால் இரண்டு மடங்கு துக்கத்தை அனுபவிக்கின்றோமே தவிர துக்க நிவர்த்தி ஏற்படுவதில்லை. சிறியபாம்புக்குட்டி பெரிய தவளையை விழுங்க முயற்சிக்கும் போது இரண்டும் துன்பத் தீயில் கருகுவதைப்போல அவ்விருவரும் துன்பப்படுகின்றனர். உங்களுக்கு பூரண சாந்தியளிக்க எந்த மனிதனாலும் முடியாது. இறைவன் ஒருவனால் மட்டுமே அத்தகைய சாந்தியளிக்க முடியும். உங்கள் வாழ்வின் கஷ்டங்களை இறைவனிடம் கூறும் வழக்கத்தைக் கைக்கொண்டால் நிரந்தரமான அமைதி கிட்டும். இறைவன் நமக்கு ஆனந்தம் மட்டுமே தரக்கூடியவர்.

எல்லோருக்கும் உருவமற்ற இறைவனிடம் விரைவில் பக்தி தோன்றுவதில்லை. சாதாரண மக்களுக்கு உருவமற்ற வழிபாட்டில் முழுத்திருப்தி தோன்றுவதில்லை. பக்தியில்லாத இறை வழிபாடு கல்லைத் தின்பது போன்றதாகும். உருவமற்ற இறைவனுக்கு உருவம் கொடுக்கவும் தெரியும். முடியும். சர்வசக்தி வாய்ந்தவனாகிய இறைவன் பக்தர்களுக்காக உருவம் தாங்கி வரவும் தயங்கமாட்டார். தண்ணீர் பனிக்கட்டியாகவும். கடல்நீர் சமையல் உப்பாகவும் மாறுவதில்லையா?

எம்மைப்படைத்த எல்லாம் வல்ல இறைவன் எமது நன்மைக்காக, எமக்கு நல்லுபதேசம் செய்வதற்காக எமக்கு முத்திப்பேற்றை அளிப்பதற்காகப் பல்வேறு உருவம் தரிக்கின்றார். எந்தத்துன்பத்தையும் மற்றவர்களிடம் கூறி இரட்டிப்பாக்காமல் இறைவனிடம் கூறி நிவாரணம் பெற்றுக் கொள்ளுங்கள்.